Vol:4 Issue 2 Nov.2020 P.g No: 09 - 15




ISSN : 2456-821X

***கட்டுரையாளர் :***

***முனைவர் ஆ.பிரபு***
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் மாவட்டம்.*

## *தலைப்பு : கற்காலத் தடயங்கள்*

***(திருப்பத்தூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வினை முன்வைத்து)***

shcrpt.edu

திருப்பத்தூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து மேற்பரப்புக் கள ஆய்வுகளின் வாயிலாகப் பல அரிய வரலாற்றுத் தடயங்கள் கண்டறியப்பட்டு முறையாக ஆய்வு செய்து இதுவரை பதிவு செய்யப்படாத தொல்லியல் தடயங்களை ஆவணப்படுத்தி வருகின்றேன். அதன் ஒரு பகுதியாக அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்ட கற்காலத் தடயங்களை விவரிப்பதே இக்கட்டுரையாகும்.

## ஆண்டியப்பனூர்

திருப்பத்தூர் அடுத்த ஆண்டியப்பனூர் அருகில் உள்ள ஜவ்வாதுமலை அடிவாரத்தில் பெருமாள் கோயில் பகுதியில் தொல்லியல் மேற்பரப்புக் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது

பழங்காலக் கற்திட்டைகள் இருப்பது கண்டறியப்பட்டன. இப்பகுதியில் ஆடு மேய்ப்பவர்களிடம் தகவல்கள் சேகரித்தபோது, பாண்டவர்குட்டை என்ற இடம் குறித்த தகவல் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு சென்று ஆய்வு செய்தபோது 10க்கும் மேற்பட்ட கற்திட்டைகள் அங்கே இருப்பது தெரியவந்தது. அந்த இடமானது சிறிய குன்றின் மேல் அமைந்துள்ளது. சுற்றிலும் கற்குவியலாகக் காட்சியளிக்கும் அந்த இடத்தில் முற்கால மனிதர்கள் ஈமச்சின்னங்களை ஏற்படுத்தியுள்ளனர்.



கற்திட்டைகள்

அவற்றில் 6 கற்திட்டைகள் நல்லநிலையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு கற்திட்டையும் சிறுசிறு கற்களை அடுக்காக அடுக்கி அதன் மீது பலகைக்கற்களை வைத்து ஏற்படுத்தியுள்ளனர். பலகைக்கல்லானது 1½ அடி தடிமன் கொண்டதாகவும், 3X4 மீட்டர் சுற்றளவு கொண்டதாகவும் காணப்படுகின்றன. மேற்கூரையாக உள்ள பலகைக் கல்லின் எடை 2 முதல் 3 டன் கொண்டதாக இருக்கக்கூடும். இவ்வளவு கடினமான எடையுள்ள கற்களை எவ்வாறு நகர்த்தி சிறு சிறு கற்களைக்

கொண்ட அடுக்களின் மீது அன்றைக்கு வைத்தனர் என்பது வியப்பாக உள்ளது. இங்குள்ள கற்திட்டைகளில் ஒன்று மட்டும் அளவில் பெரியதாக உள்ளது.

தவிர இக்கற்திட்டைக்குச் செல்வதற்காக படிக்கட்டு போன்ற வளைந்த பாதையினைக் கற்களைக் கொண்டு அழகாக ஏற்படுத்தியுள்ளனர். மற்ற கற்திட்டைகளுக்கு இல்லாத சிறப்பாக இது உள்ளதால், இக்கற்திட்டை அக்கால மக்களின் குழுத்தலைவருக்காக ஏற்படுத்தப்பட்டதாக இருக்க வாய்ப்புள்ளது. அனைத்துக் கற்திட்டைகளும் கிழக்கு நோக்கிய வாசல்களைக் கொண்டுள்ளன. கற்திட்டைகள் இருக்கும் இடத்திற்கு 50மீட்டர் தொலைவில் ஒரு அழகான நீர்ச்சுனை ஒன்றும் உள்ளது. இச்சுனையினைச் சுற்றிலும் உருளைக் கற்களைக் கொண்டு கிணறு போல ஏற்படுத்தி சுனை நீரைப் பாதுகாத்துள்ளனர். இச்சுனை அக்கால மக்களின் நீர் ஆதாரமாக இருந்திருக்கும்.



நீர்ச்சுனை

இதனருகே செவ்வக வடிவில் கற்களைக் கொண்டு அடுக்கப்பட்ட ஓர் அமைப்பினையும் ஏற்படுத்தியுள்ளனர். இக்குன்றின் கீழ்ப்பகுதியில் ஏராளமான மண் ஓடுகள் சிதறிக் கிடக்கின்றன.

இவ்வூரில் ஏற்கனவே தொல்லியல் அறிஞர் முனைவர் கா.ராஜனால் வாழ்வியல் மேடும், கல் வட்டமும் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இக்கற்திட்டைகள் ஏறத்தாழ 3500 ஆண்டுகள் பழமையான நினைவுச்சின்னங்களாகும்.

## மேல் அச்சமங்கலம்

### வேட்டைக்கருவி

ஆசாரிவட்டம் என்ற பகுதியில் விவசாயி சின்னசாமி என்பவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் பழங்காலத்தில் கற்களால் வடிவமைக்கப்பட்ட புழங்கு பொருளும், வேட்டைக் கருவியும் கண்டறியப்பட்டன. திருப்பத்தூரில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள அச்சமங்கலம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில், சின்னசாமி என்பவரின் விவசாய நிலத்தில் சிதைந்த நிலையில், கல்வட்டங்கள் இருந்தன. தொடர்ந்து அங்கு ஆய்வு செய்தபோது, விவசாய நிலத்தில் புதர்மண்டிய ஓர் இடத்தில் புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய கூர்மையான வேட்டைக்கருவியைக் கண்டெடுக்கப்பட்டது. இக்கருவியானது 11 செ.மீ. நீளமும், 2 செ.மீ. அகலமும் கொண்டதாக இருந்தது.

shctpt edu



கல்லால் செய்யப்பட்ட வேட்டைக் கருவி

அந்தக் கருவியானது முனையில் கூர்மையாகச் செதுக்கப்பட்டு அதன் அடிப்பாகம் கைப்பிடிக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கருவியைப் புதிய கற்கால மக்கள் விலங்குகளை வேட்டையாடப் பயன்படுத்தியிருக்கலாம் எனத் தெரிகிறது. மனிதர்கள் கைகளில் வைத்துப் பயன்படுத்தும் வகையிலும், கைத்தடியினை வைத்துக்கட்டி ஈட்டி போல பயன்படுத்தும் வகையிலும் இக்ககருவியானது வடிவமைக்கப்பட்டிருந்தது.

## அரவைக்கல்

வேட்டைக் கருவி கிடைத்த இடத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவில் சிறு, சிறு கற்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அக்குவியலுக்குள் அரவைக் கல் (Grinding Stone) ஒன்று கண்டறியப்பட்டது.

இந்த அரவைக் கல்லானது *16* செ.மீ. நீளமும், *12* செ.மீ. அகலமும் கொண்ட கோள வடிவத்தில் உள்ளது.



அரவைக்கல்லும் வேட்டைக்கருவியும்

அதன் மேற்புறமும், அடிப்புறமும் பள்ளமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கல்லினைத் தேய்த்து மெருகூட்டி அகழாக வடிவமைத்துள்ளனர். இதனை மூலிகை அரைக்கவோ அல்லது சந்தனம் அரைக்கவோ அந்தக் கால மக்கள் பயன்படுத்தியிருக்கலாம் எனத் தெரிகிறது. இந்தக் கருவிகள் சுமார் *3,000* ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம்.

**கல் வட்டங்கள்**

இங்கு பல கல்வட்டங்கள் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. நிலத்தின் உரிமையாளர்கள் விவசாயப் பணிகளுக்காக அவற்றை அப்புறப்படுத்தியுள்ளனர்.




கல்வட்டங்கள் இருந்த இடம்

கல்வட்டங்களில் இருந்த உருளை வடிவக்கற்களை வரப்புகளில் அடுக்கி வைத்துள்ளனர். சில இடங்களில் புதர்மண்டிக் கிடக்கின்றது. அங்கு பெண்தெய்வம் இருப்பதாக நம்புகின்றனர். அவ்விடத்தில் சிறு சிறு கற்களை வைத்து வழிபாடும் நடத்துகின்றனர். ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர்.